# ஒளிச்சுடர்

(சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளியின் காலாண்டு இதழ்)

## டிசம்பர் 2025

## வரவிருக்கும் முக்கிய நிகழ்வுகள்

**ஜனவரி 31, 2026** சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளி விளையாட்டு தினம் / பொங்கல் விழா

**பிப்ரவரி 7, 2026** இரண்டாம் பருவத் தேர்வு

**பிப்ரவரி 13, 2026** மூன்றாம் பருவம் தொடக்கம், (இணையத்தளம் வாயிலாக)

## பிறந்தநாள் வாழ்த்துகள்

**டிசம்பர்** : நிஷாந்த் கார்த்திக், வினயா நந்தகுமார், கீர்த்தனா ராம்குமார், குரு வேலுமணி, ஸ்ருதி பால்பாண்டியன்

**ஜனவரி**: ஆயுஷி வெங்கடராமன், கிர்த்திகா கார்த்திக்ராஜா

**பிப்ரவரி**: நிமலன் செந்தில்கணபதி, இலக்கியா இளங்கோ, ஆத்விகா பிரதீப்

## அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் 7வது ஆண்டு இணையக் கூட்டம்

| பெயர் | பங்கேற்ற போட்டி |
|---|---|
| ஆதர்ஷனா தங்கம்ராஜதுரை | கதை சொல்லுதல் |
| ஆதர்ஷனா தங்கம்ராஜதுரை + மஞ்சுஸ்ரீ முத்துகணேசன் | மாறுவேடப் போட்டி |
| ஸ்ரீநயா நவீன் | பேச்சுப் போட்டி |
| தனிஷா புவிஅரசன் | பேச்சுப் போட்டி |
| பிரத்யுஷ் ஜெயகார்த்திகேயன் | பேச்சுப் போட்டி |
| மஞ்சுஸ்ரீ முத்துகணேசன் | கவிதைப் போட்டி |
| ரமேஷ் முத்தையா | கேன்வாஸ் செயலி குறும்படம் |


## விளையாட்டு நிலையம்

### அறிவியல் அறிவோம்



கழிவு நீர் மூடிகள் பெரும்பாலும் ஏன் வட்டமாகவே உள்ளன?

### குறுக்கெழுத்துப் புதிர்




**மேலிருந்து கீழ்**

1. Teacher தமிழில் (5)

3. ஊர்வன வகுப்பைச் சேர்ந்த ஒரு விலங்கு (2)

4. பெரும்பாலான மக்களால் முதன்மை மொழியாகப் பேசப்படுகிற ஒரு மொழி (5)

7. தமிழ் ஆண்டின் நான்காவது மாதம் (2)

**இடமிருந்து வலம்**

1. இறைவன் வேறு சொல் (5)

2. போராட்டம் வேறு சொல் (7)

3. Weapon தமிழில் (4)

4. அபாயம் வேறு சொல் (4)

5. உணவு (4)

6. விழுதுகளை உடைய ஒரு மரம் (5)

7. மகிழ்ச்சி (5)

**வலமிருந்து இடம்**

3. தச்சுத் தொழில் செய்பவர் (3)


**கீழிருந்து மேல்**

8. Evidence தமிழில் சிதைந்துள்ளது (4)

பெற்றோரிடமோ, இணையத்தளத்திலோ தேடாமல் நீங்களே சிந்தியுங்கள்!

மேற்கண்ட போட்டிகளுக்கு பதில்களை crtamilpalli@gmail.com க்கு அனுப்பவும்

# தமிழ் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் சாதனைகள்


டேக்வாண்டோ தேர்வில் **தர்ஷிக் சதீஷ்குமார், நிலை 1** சிறந்து விளங்கினார். அவருக்கு ஆரஞ்சு பெல்ட் கிடைத்துள்ளது. இந்தத் தொடரில் சிறந்த வீரராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

நவம்பர் 2025-ஆம் ஆண்டு எக்கோ ஹில் தொடக்கப்பள்ளியில் முதலாம் வகுப்பில் **தர்ஷிக்** "மரியாதைக்குரியவர்" என்ற கௌரவத்தை பெற்றார்.

**தர்ஷிக்** டேவென்போர்ட், அயோவா நடைபெற்ற ATA டைக்வாண்டோ ஹாலோவீன் போட்டியில் தனது சிறந்த செயல்திறலுக்காக ஒரு பதக்கம் பெற்றார். அவர் தனது தரப்பட்டியில் மிக வேகமாக முன்னேறியதற்காக விருதைப் பெற்றார்..



**அயுஷி வெங்கடராமன், நிலை 3** உடற்பயிற்சி போட்டியில் பங்கேற்று *பாலன்ஸ் பீம்* மற்றும் *ஃப்ளோரில்* முதல் இடத்தை பிடித்தார். ஒட்டுமொத்தமாக, அவருக்கு ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஐந்தாம் இடம் கிடைத்துள்ளது.



**ஆதர்ஷனா தங்கம்ராஜதுரை நிலை 1**, டிசம்பர் 20, 2025 அன்று சிகாகோவில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் விழா - 2025 தமிழ் வாசிப்புத் திட்டத்தில், நிலை 1 பிரிவின் கீழ் 3717 நிமிடங்கள் வாசித்து முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார்.



**பிரதன்யா தங்கம்ராஜதுரை நிலை 8**, டிசம்பர் 20, 2025 அன்று சிகாகோவில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் விழா - 2025 தமிழ் வாசிப்புத் திட்டத்தில், நிலை 5 பிரிவின் கீழ் 3192 நிமிடங்கள் வாசித்து முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார்.



**ஸ்ரீநயா நவீன், நிலை 7**, டிசம்பர் 20, 2025 அன்று சிகாகோவில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் விழா - 2025 தமிழ் வாசிப்புத் திட்டத்தில், நிலை 5 பிரிவின் கீழ் 3025 நிமிடங்கள் வாசித்து முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார்.



**சுபிக்ஷா ஜெயகுமார், முன்மழலை** அவரது இரண்டு வயதிலேயே ஏழு திருக்குறளையும், தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை முழுவதும் பாடி அசத்தியுள்ளார். இதை **'ஒளிச்சுடர்'** காலாண்டு இதழில் குறிப்பிட சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளி பெருமிதம் கொள்கிறது.

## நெடு நாள் ஆசிரியர் விருது




அர்ச்சனா வெங்கடேஷ்




கார்த்திகாயினி சுப்ரமணியன்